# ஷங்கு (Hdzanggur)




**வசிப்பிடம்:** மிகக் குறைவாகவே அறியப்பட்ட சுமார் 5,000 ஷங்கு மக்கள் தென்கிழக்கு சிங்ஹாய்ப் பகுதிகளில் வசிக்கின்றனர். முக்கியமாகக் கெர்சுங் (Ger Zhung) பள்ளத்தாக்கில் ரக்யா (Ragya) (அல்லது ரத்ஜ) புத்த மடத்தைச் சுற்றி வடகிழக்குத் தாவு பட்டணத்தில் மஞ்சள் நதியோரங்களில் வசிக்கின்றனர். இப்பகுதி கொலொக் திபெத்திய தன்னாட்சிப் பகுதியின் மாஷின் (Machen) மாவட்டத்தில் உள்ளது. ஷங்கு மக்களின் குடியிருப்பு மஞ்சள் நதியண்டை தொடங்கி இரண்டு மூன்று நாள்கள் நடைத் தொலைவு வரைக்கும் விரிந்துள்ளது.

**அடையாளம்:** ஷங்கு கொலொக் இனத்தின் பல பிரிவுகளில் ஒரு பிரிவாகும். இவர்கள் கொள்ளைக்கும் கொலைக்கும் பெயர்பெற்றவர்கள். இவர்கள் பலமாக ஆயுதம் தரித்தவர்கள் மற்றும் நடைமுறையில் சீன ஆட்சியிலிருந்து விலகி வாழ்பவர்கள். இவர்கள் மத்தியில் சென்ற முதலாவது வெளிநாட்டவர் ஜோசப் ராக் இவ்வாறு எழுதுகிறார் "நான், அறியப்படாத முரட்டாட்டமான இந்த மக்கள் எப்படிப்பட்டவர்கள் எனக் காணக் கடந்துசென்றேன். அவர்கள் எங்களைச் சந்தேகப்பட்டாலும் எங்களுடைய தோற்றத்தைக் காண அதிக ஆர்வம் காட்டினர். அவர்கள் என்னைச் சுற்றி வட்டமிட்டு என்னுடைய உடையைத் தொட்டுப்பார்த்தனர். குறிப்பாக என்னுடைய சட்டைப்பை அவர்களுக்கு வேடிக்கையாயிருந்தது. அவர்கள் தலையை ஆட்டிக்கொண்டு குழப்பத்தோடு என்பின் வந்தனர்."

**மொழி:** ஷங்குகள் கொலொக் மொழியின் ஒரு வகையைப் பேசுகின்றனர். திபெத்திய அல்லது சீன மொழியை எழுதப் படிக்க முடிந்தோர் சிலரே.

**வரலாறு:** நூற்றாண்டுகளாக ஷங்கு இனத்தவர்கள் வெளியுலகத் தொடர்பு இன்றி வாழ்ந்துவருகின்றனர். இந்நாள்வரைக்கும் இவர்களுக்குத் தொலைப்பேசி, மின்சாரம் மற்றும் அஞ்சல் வசதியில்லை. இப்பகுதியில் மிகக்குறைவான சாலைகள் மட்டுமே உள்ளன மற்றும் இவர்கள் நூற்றாண்டுகளாக மிகக்குறைவான மாற்றத்தை மட்டுமே கண்டபண்படாத சிகிச்சை முறையையே பயன்படுத்தி வருகின்றனர். "ஒரு முரடான மனிதனைப் புகைப்படம் எடுக்க என்னால் முடிந்தது....அவனுடைய வயிற்றுப்பகுதி, வயிற்றுவலியைக் குணமாக்க எரிகிற துணியை வயிற்றுக்கு நேராகப் பிடித்ததால் உண்டான நேரான தழும்புகளால் நிறைந்திருந்தது... மற்றவர்கள் மூட்டுவலியைக் குணமாக்க கடந்து சென்ற வேதனைகளைக் காட்டும் தழும்புகள் மணிக்கட்டுகளிலும் கைகளிலும் இருந்தன."

**பழக்கவழக்கங்கள்:** யாரும் நினைவில் கொள்ளமுடியாத காலங்களாக ஷங்கு மக்கள் மஞ்சள் நதியைக் கடக்க ஒரு தனித்தன்மையான முறையைக் கையாள்கின்றனர். கி.பி.1929 ல் ஜோசப் ராக் இதைக்குறித்து முதன்முறையாக எழுதியதிலிருந்து இன்றுவரை இம்முறையில் எந்த மாற்றமுமில்லை. "இங்கே ஒன்பதிலிருந்து பன்னிரண்டு ஊதப்பட்ட ஆட்டுத்தோலால் தாங்கப்பட்ட கட்டுமரம் பயன்பாட்டில் இருந்தது. ஒவ்வொரு பிரயாணத்திற்குப் பிறகும் ஒவ்வொரு தோலையும் ஊதவேண்டும் – நுரையீரலுக்கு நல்ல பயிற்சி. உறுதியற்ற இந்தக் கட்டுமரத்தில் 12 பேர் வரை பயணம் செய்வார்கள்"

**மதம்:** ஷங்கு மக்கள் வைராக்கியமான திபெத்திய புத்தமதத்தினர். இவர்கள் கொடூரமான சில மலைத் தெய்வங்களையும் வணங்குகின்றனர், இவற்றைப் புத்தமதத்தின் உலகநோக்குக்குள் சேர்த்துக்கொண்டனர். ரக்யா புத்த மடத்தின் ஆதிக்கம் இப்பகுதியில் மிக அதிகம். மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த பலர் ரக்யா புத்த மடத்தில் புத்தமதத்தைப் படித்துக்கொண்டிருக்கின்றனர். சீன அதிகாரிகள் கடந்த அநேக ஆண்டுகளாக ரக்யா மடத்தின் தலைவர்களைத் துன்புறுத்திவருகின்றனர். சிலர் சிறையில் அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர். உள்ளூர் சீன அதிகாரிகள் 'உன் தேசத்தை நேசி, உன் மதத்தை நேசி' என்கிற பிரச்சாரத்தை ரக்யா புத்த மடத்தில் ஆரம்பித்துள்ளனர். கி.பி. 2003 ல் கீழ்வருமாறு கூறப்பட்டது 'ஒவ்வொரு வருடம் சில முப்பது சீன அதிகாரிகள் மடத்திற்கு வந்து ஒரு மாதம் தங்குகின்றனர். இந்நாள்களில் புத்தத் துறவிகள் தலாய் லாமாவிற்கு விரோதமான கட்டுரைகளைப் படிக்க மற்றும் எழுதச் செய்யப்படுகின்றனர்.'

**கிறிஸ்துவம்:** ஆவிக்குரிய ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தனிமைப்படுத்தப்பட்ட இப்பகுதியில் இந்நாள்வரை கிறிஸ்துவின் சுவிசேஷம் உட்புகமுடியவில்லை.





**Population:**
4,370 (2000)
5,380 (2010)
5,880 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:**
**மக்கள்தொகை:** 4,370 in China (2000, P Hattaway)
**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, போதி, போதிஷ், திபெத்திய, வடக்கு திபெத்திய மொழி
**மொழி வழக்குகள்:** 0
**திபெத்திய புத்தமதம்:** 100%
**கிறிஸ்துவம்:** 0%
**வேதாகமம்:** இல்லை
**இயேசு திரைப்படம்:** இல்லை
**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை
**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை
ROPAL **குறியீடு :** இல்லை

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்